REGD. No. M. 6311 ✦ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✦ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 26உ வியாழன் (10—3—55) ★ ★ வெளியீடு: மாசி 27உ வெள்ளி (11—3—55) [இதழ் 229

## உலகைச் சுற்றும் செயற்கை 'கோள்'!

பூமிக்கு உயரே செயற்கை 'கோள்' ஒன்றை உருவாக்கு வது சாத்தியமானதே என்று அமெரிக்க ராக்கட் நிபுணர், ரோசன் கூறுகிறார்.

ஐந்தடி குறுக்களவுள்ள ஒரு பேடையை விநாடிக்கு 5 மைல் வேகத்தில் உயரே அனுப்பினால் அது ஆகர்ஷண எல்லைக்கு அப்பால் போய் நின்றுகொள்ளுமாம்.

சுமார் 10 லட்சம் அடி உயரத்தில் உள்ள அந்த எல்லையில் இருந்து விநாடிக்கு 5 மைல் வேகத்தில் அது பூமியைச் சுற்றி வருமாம். இறுதியாக அது பூமியில் வந்து விழுந்துவிடும் என்றும் அவர் கூறுகிறார்.

# காங்கிரஸ் கட்சியில் பிணக்கும் – பிளவும்!

## ஒரு ஓட்டையை மூடினால் மற்றோரிடத்தில் ஓட்டை விழுகிறது

### குடியானவர் நிவாரண மசோதாவினால் ஒரிசா காங்கிரசில் உடைப்பு

*காங்கிரஸ் கட்சியின் 'பிரபுத்தனம்' அம்பலம்*

★

கட்டாக், மார்ச் 9—

குடியானவர் நிவாரண மசோதா ஒன்று, ஒரிசா சட்ட சபையில், காங்கிரஸ் அரசாங்க சார்பில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மசோதாவின்படி, ஓராண்டு வரையில் குடியானவர்களை நிலத்தைவிட்டு வெளியேற்ற முடியாது. விளைச்சலில் ஆறில் ஒரு பங்குதான் குத்தகையாகக் குடியானவர்கள் கொடுக்கவேண்டும். பண்பயிர் விஷயத்தில் இக்குத்தகைத் தொகை சிறிய அளவில் கூட்டப்பட்டு இருக்கிறது.

இம்மசோதாவை, காங்கிரஸ் கட்சியில் இருந்துவரும் மொத்தம் 76 உறுப்பினர்கள், ஆதிவாசிகள்—அரிசனங்களாக உள்ள 26 உறுப்பினர்கள் தீவிரமாக ஆதரிக்கின்றனர். அதுவுமன்றி இவர்களுக்கு பக்கபலமாக முதல் மந்திரியும், நிலவரி மந்திரியும் பிடிவாதமாக இருந்து வருகின்றனர்.

நில வருமானத்தில் அக்கரை கொண்ட மற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் மேற்படி மசோதாவை எதிர்க்கிறார்கள். அவர்களுக்கு, பிரதேச காங்கிரஸ் தலைவரான விஸ்வநாததாஸ் பக்கபலமாக இருந்து வருகிறார். காங்கிரஸ் சட்ட சபைக் கட்சி, பிரதேச காங்கிரஸ் கட்சியைக் கலக்காமலே விவாதத்திலுள்ள மசோதாவைக்கொண்டு வந்திருப்பது குற்றமாகும் என விசுவநாததாஸ், காங்கிரஸ் முதல் மந்திரிக்குக் காரசாரமான கடிதம் ஒன்று எழுதியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

*இம்மசோதாவை சட்ட சபையில் இருக்கும் எதிர்க்கட்சிகள் ஆதரிப்பதுடன், ஆய்வுக் குழுவிற்கு அனுப்பாமலே உடனடியாக சட்டமாக்கவேண்டுமெனவும்வற்புறுத்துகின்றன.*

*இதன் விளைவாக, காங்கிரஸ் சட்ட சபை கட்சிக்கும், பிரதேச காங்கிரசிற்கும் பிளவு ஏற்படுவதுடன், காங்கிரஸ் கட்சிக்குள்ளும், அமைச்சர் குழுவிற்குள்ளும் பெரும் பிளவு ஏற்படுவது நிச்சயத்திலும் நிச்சயம் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## ஆசிய - ஆப்பிரிக்க மாநாடு

### ரஷ்யப் பிரதமர் ஆசி

*" இந்தோனேஷியாவில் நடைபெறவிருக்கும் ஆசிய — ஆப்பிரிக்க மாநாடு மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது ; மிகுந்த பலன் தரத்தக்கது,"*

*என்று ரஷ்யப் பிரதமர் மார்ஷல் புல்கானின், பர்மியத் தூதுவர் மாங்குக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டிருக்கிறார்*

*மாநாடு மகத்தான வெற்றி பெறும் என்று தான் நம்புவதாகவும், ஏனெனில், சமாதானம், நட்பு, ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ளுதல் ஆகிய நோக்கங்களுடன் அந்த மாநாடு கூட்டப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.*

*"பரந்த மக்கள் தொகை கொண்ட ஆசிய, ஆப்பிரிக்காவின் பொது முன்னேற்றத்திற்கு அந்த மாநாடு உதவ முடியும்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.*

## கம்யூனிஸ்டு தோல்வியின் எதிரொலி!

### கட்சித் தலைமை ஊழியர்களிடை பிரிவினை போக்கு

### ஈ. வெ. கி. சம்பத்

*வேலூர் நகராட்சி மன்ற வரவேற்பு*

13-3-55 காலை 9-மணி அளவில், வேலூர் நகராட்சி மன்றச் சார்பில், தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களுக்கு 'சிதம்பரம்' மண்டபத்தில் வரவேற்பு அளிக்கப்படும்.

### ரஷ்யா - சீனாவை அனவரதமும் புகழ்வதில் சலிப்பு.

### 'தொழிற்கட்சி' என்ற புதிய கட்சி உருவாகும்?

ஆந்திர கம்யூனிஸ்டு கட்சி அண்மையில் மேற்கொண்ட திட்டங்கள், நடைமுறைகளின் காரணமாக உயர்தரத் தலைவர்களுக்குள்ளாகவும், ஊழியர்களிடையிலும் மனத்தாங்கல் ஏற்பட்டு இருப்பதாகவும், அதன் விளைவாகப் பலர், கம்யூனிஸ்டு கட்சியைவிட்டு வெளியேறி, கம்யூனிஸ்டு—காங்கிரஸ் கட்சிகளை எதிர்க்கும் நோக்குடன், 'தொழிற் கட்சி' என்ற பெயரில் ஒரு புதிய கட்சியைத் துவங்கக்கூடுமெனவும் அங்குள்ள அரசியல் வட்டாரம் நம்புகிறது.

தொகுதி ஒவ்வொன்றிலும் கட்சிக்குள்ள ஆதரவை முன்கூட்டியே ஆராய்ந்தறியாமல் தொகுதிகள் அனைத்துக்கும் அபேட்சகர்களை நிறுத்தினதற்கும், ஆந்திராவில் நிலவிவரும் நிலைமைக்கும், ஆந்திர உணர்வுக்கு ஒத்துவராததுமான தேர்தல் அறிக்கையை உருவாக்கினதற்கும் அகில இந்திய கம்யூனிஸ்டு கட்சிதலைமையையும் ஆந்திர கட்சித் தலைமையையும், முக்கியமான கட்சி உறுப்பினர்களில் சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர் எனவும் மேற்படி அரசியல் வட்டாரம் கருதுகிறது.

ரஷ்யாவையும் சீனாவையும் அனவரதமும் பாராட்டிக் கொண்டிருப்பதும், அதன் வழியில் நடைமுறைகளையும் கொடியையும் அமைத்துக்கொண்டு இருப்பதும், தங்களுடைய நலன்களுக்கு எதிராக ரஷ்யாவிற்குத் தங்களை அடிமையாக்கிவிட கம்யூனிஸ்டு கட்சியினர் முயலுகின்றனர் என்ற எண்ணத்தை ஆந்திரர்கள் கொண்டுவிட்டனர்'; அதற்குக் காரணமாகத் தலைவர்கள் இருந்தனர் எனவும் குற்றச்சாட்டு கிளம்பியுள்ளது.

'முரண்பாடுடைய அழிவைக் கொடுக்கும் முன்யோசனையின்றி போடப்பட்டுள்ள திட்டங்களும் நடைமுறைகளும்' கட்சியின் மீது இப்பொழுது இருந்துவரும் பற்றுதலையும்கூட எதிர்காலத்தில் மக்களிடமிருந்து போக்கிவிடச் செய்யும் எனவும் கட்சிக்குள் பலர் நம்புவதாகவும் தெரியவருகிறது.

குடியானவர் தலைவர்களாக உள்ள குண்டுரு பாபையா, நந்தூரி பிரசாதராவ், செலகானி வாசுதேவராவ் ஆகிய மூவரும், கட்சியைவிட்டு வெளியேறும் முடிவை வெளிப்படையாக அறிவித்துள்ளனர் எனவும், உயர்தரத் தலைவர்களாக இருக்கும் சந்திர இராஜேஸ்வரராவுக்கும் பி. சுந்தரையாவிற்கும் இடையில் பலமான கருத்துப் பிளவு இருந்துவருகிறது எனவும், மேற்படி அரசியல் வட்டாரம் அறிந்திருக்கிறது.

## மூன்றாவது — புது எஃகு ஆலை!

### சேலத்தில் அல்ல — கல்கத்தாவில்!

*கல்கத்தா, மார்ச் 9—*

*இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இன்னும் ஒரிரண்டு எஃகுத் தொழிற்சாலைகள் நிறுவப்படலாம் என்றும், அவற்றுள் ஒன்று மேற்கு வங்கத்தில் இடம் பெறும் என்றும் உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.*

## ஆந்திர தேர்தல் முடிவு கண்டு சென்னை நீதிபதி பூரிப்பு!

### வரைகடந்த வம்பளப்பு!

" ஆந்திரத் தேர்தல் பாராட்டுதலுக்குரியதாகும்; ஆந்திர மக்களிடை நான் நீண்ட நாள் பணிபுரிந்திருக்கிறேன்; அவர்கள் மீது எனக்கு நிரம்ப அன்பு உண்டு; அந்த மாநிலத்தின் சாதாரண மக்கள் அண்மையில் நடைபெற்ற சோக நிகழ்ச்சிகளால் பெரும் திகைப்புக்காளாகி இருக்கலாம்."

" ஒரு ஓட்டு பெரும்பான்மையால், சென்னையை தலைநகராகப் பெறுவதை இழந்துவிட்டு, கர்னூல் சென்றனர்; ஒரு ஓட்டு பெரும்பான்மையால், சென்னை உயர்நீதி மன்றத்தைப் பிரித்துத் தனியாகக் குண்டூரில் உயர் நீதிமன்றம் கண்டனர்; இறுதியாக ஒரு ஓட்டு பெரும்பான்மையால் சட்ட சபை உறுப்பினர்கள் பழிக்குப் பழி வாங்கப்பட்டுவிட்டனர்."

*—என்று, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி மாக், வேப்பேரி பள்ளிக்கூடம் ஒன்றின் பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.*

*ஆந்திரத் தேர்தலைப் பற்றி மேலும் அவர் குறிப்பிட்டதாவது :*

" காங்கிரஸ் கட்சிக்கு ஆந்திர மக்கள் இன்று பெரும்பான்மை வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார்கள்; காங்கிரஸ் கட்சிதான் தேசிய ஒற்றுமையையும், சுதந்திர ஜனநாயகத் தத்துவங்களையும் பாதுகாக்கக் கூடியது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

" தேசிய ஒற்றுமையையும், இலட்சியங்களையும் சீரழிக்குமோ என்று அச்சுறுத்துகிற சக்திகளுக்கெதிராக நாட்டில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது.

இந்தியாவின் வாக்காளர்கள் 'முன்னிலையில், தேசிய ஒற்றுமையை பாதுகாப்பவர் வேண்டுமா அல்லது தேசிய ஒற்றுமையைச் சீரழிக்க அச்சுறுத்தும் ஒன்று வேண்டுமா என்று கேட்கப்பட்டால், நிச்சயமாக இந்திய மக்கள், எவ்விதக் கருணையுமின்றி, தேசிய ஒற்றுமையைச் சீரழிக்க அச்சுறுத்தும் சக்திகளை ஒழித்துக் கட்டுவர்—இடம் தரமாட்டார்கள் என்பதில் எனக்கு சந்தேகம் அறவே இல்லை."

## கண்ணிழந்தோரின் கண்கண்ட 'தெய்வம்!'

*சென்னை, மார்ச் 9—*

*கண்ணிழந்தவரும் காதுகேளாதவருமான அமெரிக்க ஆசிரியை டாக்டர் தோழியர் ஹெலன் கெல்லர், கண், காது இழந்தோரின் கண்கண்ட தெய்வமெனப் படுபவர். இந்திய சர்க்காரின் அழைப்பின் பேரில் இந்தியா வந்துள்ள அவர், ஐதராபாத்திலிருந்து இன்று விமான மூலம் சென்னை வந்துள்ளார்.*

*அவருடன் அவரது செயலாளர் தோழியர் போலி தாம்சன் என்பாரும் வந்துள்ளார்.*

*அவர்கள் சென்னையில் இம்மாதம் 17-ந் தேதி வரை தங்கியிருப்பர் எனத் தெரிகிறது.*

*சென்னை கவர்னர் பிரகாசாவும், இதர உயர்தர அதிகாரிகளும் விமான நிலையத்தில் அவரை வரவேற்றனர்.*

*இந்தியாவின் கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 15 கோடி 5 லட்சமாகும்—அதாவது உலகத்திலுள்ள கால்நடைகளில் 4-ல் ஒரு பங்காகும்.*

## இருள் சூழ்கிறது!

*பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டதை யொட்டி எழுந்துள்ள பிரச்சினைக்கு, நீதி மன்றத்திற்கு வெளியில் நடைபெற்ற சமரச முயற்சிகள் தோற்றுவிட்டன என்று தெரிகிறது.*

*இதுபற்றி அரசியல் நிர்ணய சபைத் தலைவர் தமிசுதீன்கானைச் சந்திப்பதற்காக லாகூர் சென்றிருந்த பாக். மந்திரிகளான மேஜர் ஜெனரல் இஸ்கந்தர் மீர்ஜா, சுஹராவர்த்தி இருவரும் அங்கு பேச்சு வார்த்தைகள் துவங்க முடியாததால், கராச்சிக்குத் திரும்பிவிட்டனர் என்று கூறப்படுகிறது.*

*உடன் சென்ற மற்றொரு மந்திரியான சௌத்திரி முகமது அலியும் கராச்சி திரும்பிவிடுகிறாராம்.*

### மலைஜாதி மக்களுக்கு பள்ளிக்கூடம்

*நீலகிரியில் உள்ள பணியர்கள், மற்ற மலைசாதி வகுப்பினர்களுக்காக மாணவர் விடுதியுடன் கூடிய வசதிகளுடன் ஒரு பள்ளிக்கூடம் துவக்க சென்னை சர்க்கார் அனுமதி அளித்திருக்கிறதாம்.*

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

சென்னை 10—3—55 வியாழன்


# வங்கத்தைப் பார்!

கல்கத்தாவில் 'பாதாள இரயில்வே' வேண்டும் என்றெண்ணினர், மேற்கு வங்க அரசாங்கத்தார்!

இரயில்வேக்களின் நிர்வாகம், இந்தியப் பேரரசின் கீழ் உள்ளவை; கல்கத்தாவிலோ, கல்யாணியிலோ, ஆவடியிலோ அல்லது வேறெங்குமோ புதிய இரயில் பாதைகளை அமைக்கவும், இருக்கிற இரயில் நிலைய எண்ணிக்கைகளை அதிகப்படுத்தவும் வேண்டுமானல் அவற்றைச் செய்ய வேண்டிய பொறுப்பு இந்தியப் பேரரசைச் சார்ந்ததாகும்.

மேற்கு வங்க சர்க்காரோ, கல்கத்தாவிலும், சுற்றுப்புறங்களிலும் போக்குவரத்தில் நிலவும் நெருக்கடிக்குப் பரிகாரமாக 'பாதாள இரயில்வே' அமைக்க வேண்டுமென விரும்பினல், மத்திய அரசாங்கத்தை அணுகியிருக்க வேண்டும்; ஆனல், மாருக மேற்கு வங்க சர்க்கார், தாங்களாகவே 'பாதாள இரயில்' அமைப்பது பற்றி ஆராய்ச்சி செய்ய முற்பட்டு, ஆறு இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கின்றனர்.

தாங்கள், தலைநகரில் நிலவும் போக்குவரத்து நெருக்கடியைப் போக்க, மேற்கு வங்க சர்க்கார், 'ரூ. 6 இலட்சம் செலவு செய்து, பாதாள இரயில் அமைக்க முடியுமா?' என்று ஆராய்ச்சி செய்கிருர்கள்.

ஆனல், இங்கு—சென்னையில், சாதாரண மக்களுக்குச் சிக்கனமான போக்குவரத்து சாதனமாக விளங்கிய 'டிராம்,' ஓடாமல் நின்றுவிட்டது—நிறுத்திவிட்டனர்,—ஓட்டை 'டிராம்'களை ஓட்டி, கொள்ளை இலாபம் சம்பாதித்துக்கொண்டிருந்த வெள்ளை முதலாளிகள்! அதனல் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடி எழுதி விளங்கவைக்கக்கூடியதல்ல!

இங்கும் ஒரு மாநில சர்க்கார் இருக்கிறது — நின்றுபோன 'டிராம்' போக்குவரத்தை மீண்டும் ஓட்ட வைக்க வேண்டும் என்ற எண்ணமே கொண்டில்லாத வகையில்!

மேற்கு வங்க சர்க்கார், இந்தியப் பேரரசின் நிர்வாகப் பொறுப்பிலிருக்கும் இரயில்வே இலாகா சம்பந்தப்பட்ட வேலையை, தனது கஜானுவிலிருந்து பணம் செலவிட்டு மேற்கொள்ள முன்வருகிறது—நிலவுகிற போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக! அந்த வகையில் அம்மாநிலத்தின் ஆர்வம் பாராட்டப்படத் தக்கதுதான்; ஆனல், அதன் மிதமிஞ்சிய போக்கு தவருனது; கண்டனத்திற்குரியதும் கூட!

'மேற்கு வங்க சர்க்காரைப் போலவே இங்கிருக்கும் சர்க்காரும், மிதமிஞ்சி நடந்துகொள்ளவேண்டும்' என்பதல்ல நமது நோக்கம்; அப்படி யாரேனும் எண்ணினல் அது கேலிக்குரியதுமாகும்.

கல்கத்தா நகரிலும், சுற்றுப்புறங்களிலும் நிலவும் போக்குவரத்து நெருக்கடிக்குப் பரிகாரம் காண்பதில் மேற்கு வங்க சர்க்காருக்கு அக்கரையும் ஆர்வமும் இருக்கிறது. அந்த ஆர்வமும், அக்கரையும் இங்குள்ள சர்க்காருக்கு, சென்னையிலும் இதர இடங்களிலும் நிலவும் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வழிவகை காண்பதில் இருக்க வேண்டாமா? 'மேற்கு வங்கத்தைப் பார்,' என்று, நெருக்கடிக்கு ஆளாகும் பொதுமக்கள் கூறமாட்டார்களா?

அதுபோலவே மேற்கு வங்க சர்க்கார், மேற்கு வங்கத்தில் உப்பு உற்பத்தி செய்வதற்காக ரூ. 4·44 கோடியில் திட்டம் ஒன்று தயாரித்திருக்கிருர்கள்; திட்டம் தயாரிப்பதற்கு மட்டுமே ஒரு லட்சத்து அறுபதாயிரம் ரூபாய் செலவிட்டுள்ள அந்த சர்க்காருக்கு "இந்தியா, 1951-ம் ஆண்டிலேயே உப்பு உற்பத்தியில், 'சுயதேவைப் பூர்த்தி' அளவை எட்டிவிட்டது," என்பது தெரியாதுபோலும்!

மேற்கு வங்க சர்க்கார், இந்தியாவில் உப்பு உற்பத்தி ஏற்கனவே தேவையான அளவு இருந்தாலுங்கூட, தங்கள் மாநிலத்திலேயே உப்புத் தொழில் துவக்கினல் ஏற்படக்கூடிய பலாபலன்களை எண்ணிப் பார்த்திருக்கிருர்கள் என்று கொண்டாலும், அது தவருனது எனக்கூறிவிட முடியாது.

'தங்கள் மாநிலத்திலேயே உப்பு உற்பத்தி துவங்கினல், உப்பு இறக்குமதி செய்வதற்குத் தரப்படும்போக்குவரத்துச் செலவு மிச்சமாகும்; தொழில் துவக்கப்படுவதினல் சில ஆயிரம் பேருக்காவது உத்தியோகம் தர முடியும்,' என்ற கணக்குப் போட்டே உப்புத் தொழில் பற்றிய திட்டத்திற்காக, ஆரம்பத்திலேயே ஒரு லட்சத்து அறுபத்தாருயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிருர்கள்—மேற்கு வங்க அரசாங்கத்தார் என்றுகூட கூறலாம்.

தங்கள் மாநிலத்தில் தொழில் வளர வேண்டும் என்பதில், அதுவும் சாதாரணமான உப்பு உற்பத்தித் தொழில் போன்றவைகள்கூட தங்கள் மாநிலத்தில் துவக்கப்பட்டு வளர வேண்டுமென்பதில் மேற்கு வங்க சர்க்காருக்கு உள்ள போரார்வத்தை இந்தச் செய்தி நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

அதே நேரத்தில், இங்கு—சென்னை மாநிலத்தில் உள்ள சர்க்கார், தங்கள் மாநிலத்தில் தொழில் வளர வேண்டும் என்பதில் எவ்வளவு அக்கரை காட்டுகிருர்கள்?

"சேலத்திலா இரும்புத் தொழிற்சாலை?" என்ற கிண்டலையும், "என் இங்கு பெரும் தொழில்கள் இல்லை; ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னுடு புறக்கணிக்கப்பட்டிருப்பது ஏன்?" என்ற கேள்வியையும், கேட்டும் கேட்காதவர்கள் போல் அவர்கள் இருக்கிருர்கள்!

இந்த மாநிலத்தில் பெரும் தொழில்கள் அமைய வேண்டுமென்பதில், மேற்கு வங்க சர்க்காருக்கு உப்புத் தொழில் ஆரம்பிப்பதில் இருக்கும் ஆர்வத்தில் ஓர் சிறிதளவுகூட உணர்வு கொண்டவர்களாக இல்லாமலிருக்கிருர்கள்!

இந்த நிலைமைகளை நன்குணர்ந்துவிட்டால், 'மேற்கு வங்கத்தைப் பார்' என்று, பொதுமக்கள் கேட்காமலா இருப்பார்கள்?

## நேபா காகிதத் தொழிற்சாலை

### மத்திய பிரதேசத்தில்துவக்கம்

நாகபுரி, மார்ச் 7—

மத்திய பிரதேச அரசாங்கம், நேபா காகிதத் தொழிற்சாலையின் பொருளாதார நிலை குறித்து ஆராய்ந்தறிய மத்திய அரசாங்கம் நியமித்த ஆய்வுக்குழுவின் சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

காகிதம் செய்வதற்குத் தேவையான மரக்கூழ் தயாரிப்பதற்கு உதவும் இருவகை மரங்களை வெகுவாகப் பயிரிடவும், வளர்க்கவும் வேண்டிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவாம்.

அந்தக் காகித உற்பத்தி ஆலையின் இராசயனப் பகுதி ஏற்கனவே கட்டப்பட்டுவிட்டதாயும். தொடர்ந்து, ஆலை முழுவதும் எழுப்புவதற்கான வேலைகள் நடப்பதாயும் தெரிகிறது.

1956-ம் ஆண்டு துவக்கத்தில். இந்த ஆலை, தினம் 100 டன் காகிதம் உற்பத்தி செய்யும் என்று தெரிகிறது.

## உயர்தர தொழில் - நுட்பக் கல்விக் கழகம்

சென்னை, மார்ச் 8—

சென்னை மாநிலத்தில் ஏதாவது ஒரு இடத்தில் இப்போது கரக்பூரில் உள்ள தொழில் நுட்பப் பயிற்சிக் கழகத்தைப் போன்ற தொழில் நுட்பப் பயிற்சிக் கழகத்தை துவங்க வேண்டும் என்று இந்தியப் பேரரசிற்கு சென்னை அரசாங்கம் யோசனை தெரிவித்துள்ளதாம்.

அந்தக் கழகத்தை அமைப்பதற்கு குரோம்பேட்டையில் உள்ள சென்னை தொழில் நுட்பக் கழகத்தை ஆதார நிறுவனமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று சென்னை சர்க்கார் கருதுகிறதாம்.

உயர்தரத் தொழில் நுட்ப கல்விப் பயிற்சிக்காக, சென்னை தொழில் நுட்பக் கழகத்தை மத்திய சர்க்கார் நிறுவனமாக நடத்துவதற்கு இப்போது அதை நடத்திவரும் நிர்வாகிகள் சம்மதித்திருப்பதாயும் சொல்லப்படுகிறது.

## இராசேந்திர பிரசாத் கடவுளாகிருர்!

இந்தூர், மார்ச் 7—

டாக்டர் இராசேந்திர பிரசாதை ஒரு பத்து வயதுச் சிறுமி கடவுளாக்கிவிட்டாள்.

ஜினு பாங்சிங் என்ற அந்தச் சிறுமி குடியரசுத் தலைவருக்கு மாலை அணிவித்தபொழுது, பத்திரிகையாளர் அவளை அணுகி, 'யாருக்கு அவள் மாலை அணிவித்தாள்?' என்று கேட்டபோது, 'பில்' என்ற தனது வகுப்பு மக்களின் தேவதைகளில் எல்லாம் மிக மிகச் சக்தி வாய்ந்ததென்று அவளுக்குச் சொல்லப்பட்டிருக்கிற 'தோலா பாபா' என்ற கடவுளுக்கு, தான் மாலையணிவித்ததாகக் கூறினளாம்.

'டாக்டர் பிரசாத் யார் என்று தெரியுமா?' என்று கேட்டபோது, அவள் திரும்பத் திரும்ப, 'தோலா பாபா, தோலா பாபா' என்றே கூறினளாம்.

## மத்திய சர்க்கார் விசித்திரப் போக்கு!

### கதர் அபிவிருத்திக்கு ரூ. 10 லட்சம் மானியம்

### கைத்தறி வளர்ச்சிக்கு ரூ. $1\frac{1}{2}$-லட்சம் மட்டுமேதான்!

கைத்தறி, குடிசைத் தொழில் இவற்றின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி தேவையற்ற கதர் உற்பத்திக்கும் இந்திய சர்க்கார் லட்சக்கணக்கான ரூபாய் மானியம் தந்து பாழடிக்கிறது.

அகில இந்திய கதர் கிராமத் தொழில் போர்டு இந்தியாவெங்கணுமுள்ள கதர் உற்பத்தி நிலையங்களுக்கு உதவுவதற்காக ரூ. 5 லட்சமும், கதர் விற்பனைக்கு 'ரிபேட்' தருவதற்காக ரூ. 5-லட்சமும் மானியம் வழங்கும் என்றும் தெரிகிறது.

சென்னை மாநிலத்திற்கு கைத்தறி நெசவு வளர்ச்சிக்காக ரூ. 72,955 மட்டும் தரப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத்தில் உள்ள கைத்தறி நெசவு பற்றி 'சர்வே' ஒன்று நடத்துவதற்காக சென்னை பல்கலைக் கழகத்தாருக்கு ரூ 65,000 மானியம் தரப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது.

## பர்மா-ஷெல் எண்ணெய்

### சுத்திகரிப்பு தொழிற்சாலை

புதுடில்லி, மார்ச் 7—

"பர்மா-ஷெல் துவங்கும் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையின் மூலதனத்தில் இந்தியா பங்கு பெறுவது பற்றிய முயற்சிக்கான நடவடிக்கை எதும் மேற்கொள்ளப்படவில்லை," என்று உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி, மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிருர்.

"மொத்தம் ரூ 33 கோடி மூலதனத்தில், சுமார் ரூ 2 கோடிக்கு மட்டும்தான் இந்திய மூலதனம் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிகிறது; அதை வேண்டுமானல், சர்க்கார் விரும்பினல் ரூ. 3 கோடியாக உயர்த்தலாம்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய சர்க்கார், கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக, 1954-55-ம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலத்தில், சகாயத் தொகையாக ரூ. 73,53,000-ம், கடனுதவியாக ரூ. 2,31,00,000-ம் வழங்கினர்.

## சென்னை சட்டசபையில்....

✭

### திராவிட மொழிகள்!

காட்டிலாகா மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்கு மந்திரி தமிழில் பதில் சொல்லி முடித்தார். உடனே ஒரு மலையாள உறுப்பினர் எழுந்து "மலையாள, கன்னட உறுப்பினர்களுக்கு, தமிழில் மந்திரி பேசியது புரியவில்லையாகையால், மலையாள, கன்னட மொழி பெயர்ப்புகளை உறுப்பினர்களுக்குத் தர ஏற்பாடு செய்யவேண்டும்" என்ருர்.

மந்திரியார், மொழி பெயர்ப்பு தருவது சாத்தியமில்லையென்றும், வேண்டுமானல், மலையாள, கன்னட உறுப்பினர்கள் தன்னிடம் வந்தால், தான் ஆங்கிலத்தில் விஷயத்தை விளக்குவதாகவும் கூறினர்; இந்தச் சமாதானம் அந்த உறுப்பினருக்குத் திருப்தியளிக்கவில்லை.

பின்னர், தோழர் சுயம்பிரகாசம், வேருெரு மானியத்தின் மீது தமிழில் பேச எழுந்ததும், காங்கிரஸ் உறுப்பினரொருவர் எழுந்து தமிழில் பேசுவது பற்றிக் குறிப்பிட்டார்.

ம. சோ. கட்சியைச் சேர்ந்த டாக்டர் கே. பி. மேனன் எழுந்து, "மலையாளத்தில் உள்ள பெரும்பான்மைச் சொற்கள், தமிழ்ச் சொற்களேயாகையால், மலையாள உறுப்பினர்கள் உன்னிப்பாகக் கேட்டால் தமிழைப் புரிந்துகொள்ள முடிகிறது," என்று குறிப்பிட்டு, "கன்னடியர்கள்தான் சிறிது கஷ்டப்படுவார்கள்," என்று கூறினர்.

'கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் உன் உதிரத்து உதித்தெழுந்து' என்ற கவிதையைக் கூறி "ஒருவர் மொழியை மற்றவர் புரிந்துகொள்ளுவதில் அதிகக் கஷ்டம் இருப்பதாகக் கூற முடியாது," என்ருர், தோழர் சுயம்பிரகாசம்.

### யோசனை செயல்படுமா?

ஆவாரம் செடி கூழிலிருந்து பரீட்சார்த்த முறையில் பத்திரிகைக்குத் தேவையான காகிதம் செய்யும் தொழிற்சாலை ஒன்றை பரீட்சார்த்த முறையில் நீலகிரியில் நிறுவ மத்திய சர்க்கார் யோசித்து வருவதாக, காட்டிலாகா மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளிக்கையில் விவசாய மந்திரி பக்தவத்சலம் குறிப்பிட்டார்.

டேராடூனில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து ஆவாரம் செடி கட்டைகளை கூழாக்கி 'நியூஸ் பிரிண்ட்' காகிதம் செய்யலாமெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### கண் இருக்குமா?

குறவர் சமூகத்தாருக்கு வசதிகள் அளிப்பது பற்றி கேள்விகள் கேட்கப்படுகையில் உறுப்பினர் ஒருவர், "புது வாழ்வளிக்கும் விஷயத்தில் குறப் பெண்கள் மீது மந்திரிக்கு ஒரு கண் இருக்குமா?" என்று கேட்டார்.

பலத்த சிரிப்பொலிக்கிடையே பதிலிறுக்க எழுந்த மந்திரி பரமேஸ்வரன், ஏதோ சொல்ல முயற்சித்தாரே தவிர எதும் சொல்ல முடியாதவராயிருந்தார்.

மந்திரியின் தவிப்பைக் கண்ட சபைத் தலைவர், 'பதில் இல்லை என்ருல் பதிலளிக்க வேண்டாம்,' என்று கூறி மந்திரியை தமது இடத்தில் உட்காரச் செய்தார்.

### பெண்களில் நிற பேதமா?

"'நர்ஸ்' பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவோரெல்லாம்; சிவப்பு நிறப் பெண்களாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றனரே, இனி கருப்பு நிறப் பெண்களையும் தேர்ந்தெடுப்பது கவனிக்கப்படுமா?" என்று, பலத்த சிரிப்பொலிக்கிடையே ஒரு உறுப்பினர் கேட்டபோது, சுகாதார மந்திரி, "சிவப்பு, கருப்பு—இரு நிற நர்சுகளும் இருக்கின்றனர்," என்று பதிலளித்தார்.

### எல்லாம் 'கமிட்டி' மயம்!

"ரெவினியூ நிர்வாகச் சீரமைப்புக் 'கமிட்டி'யின் சிபாரிசுகளைப் பரிசிலனை செய்த பின்னர், கிராமாதிகாரிகள் சம்பள உயர்வு, வேலை நிலைமைபற்றி பரிசீலிக்க மேலும் ஒரு 'கமிட்டி' அவசியமானல் நிறுவுவதை அரசாங்கம் கவனிக்கும்," என்று மந்திரி சுப்பிரமணியம் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

### பரிசிலனையிலிருக்கிறதாம்!

"சென்னை மாநிலத்தில் ஒரு இரும்பு, எஃகுத் தொழிற்சாலையை நிறுவும் பிரச்சினை இந்திய சர்க்கார் பரிசிலனையிலிருக்கிறது," என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மந்திரி பக்தவத்சலம் குறிப்பிட்டார்.

### அதுவும் பரிசிலனையில்தான்!

வர்த்தக வரி அதிகாரிகளிடம் செய்யப்படும் அப்பீல்கள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டுமென விதியிருப்பது உண்மையே என்றும், பிரதேச மொழியில் எழுதுவதை மதித்து விதிகளை திருத்துவது அரசாங்கத்தின் பரிசிலனையிலிருப்பதாகவும், கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் ரெவின்யூ மந்திரி தெரிவித்தார்.

# 'பரீட்சையின்போது ஒத்துழைக்க மாட்டோம்'

## 'அடையாள வேலைநிறுத்தம் செய்கிறோம்'

*சம்பள உயர்வு தராத சர்க்காருக்கு மத்தியப் பிரதேச ஆசிரியர்களின் பதில்*

நாகபுரி, மார்ச் 8—

மத்தியப் பிரதேச மாநில 'சேகண்டரி' பள்ளி ஆசிரியர்கள் சுமார் 4,000 பேர், வரும் மார்ச் 14-ந் தேதியன்று ஒரு அடையாள வேலைநிறுத்தம் செய்வர் என்று அறிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் 'செகண்டரி கல்வி போர்டு' நடத்தும் 'மெட்ரிகுலேஷன்' பரீட்சையின்போது ஒத்துழைப்பதில்லை என்றும் ஆசிரியர்கள் சங்கம் முடிவெடுத்துள்ளதாம்.

அன்று சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் பரீட்சை எழுதவிருக்கின்றனர்.

*நேற்றிரவு கூடிய மத்திய பிரதேச மாநில செகண்டரி ஆசிரியர் சங்க, நிர்வாகக் குழு, இம்முடிவை மேற்கொண்டதுடன், சங்க உறுப்பினர்களும், மற்றும் சர்க்கார், நகர சபைகள், தனிப்பட்டோர் ஆகியோர் நடத்தும் பள்ளிகளில் பணி புரிவோரும், அன்று, சர்க்காருடன் ஒத்துழைக்காமல் அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கு பெற வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.*

*நிர்வாகக் குழு, மேலும், ஆசிரியர்களின் பிரதிநிதிகளாக செகண்டரி கல்விக் குழுவில் இடம் பெற்றுள்ள 15 பேர்களும் குழுவிலிருந்து ராஜிநாமாச் செய்துவிட வேண்டும் என்றும், குழுவில் உறுப்பினர்களாயுள்ள இதர ஆசிரியர்களும் அவ்வாறே விலகிவிட வேண்டும் என்றும் சங்க நிர்வாகக் குழு தாக்கீது பிறப்பித்துள்ளதாம்.*

*மத்தியப் பிரதேச சர்க்கார், சர்க்கார் நடத்தாத இதர பள்ளிகளுக்குப் போதுமான மானியம் தருவதில்லை என்றும், அதனால் ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட முடிவதில்லை என்றும் நிர்வாகக் குழு நிறைவேற்றியுள்ள மற்றொரு கண்டனத் தீர்மானம் கூறுகிறது.*

*செகண்டரி கல்வி பற்றிச் சட்டமியற்றிய நாளிலிருந்து, கடந்த ஏழாண்டுகளாக ஆசிரியர்கள் சம்பள உயர்வு கோரியும், பள்ளி நடைமுறைச் சட்டத்தை அமுல் செய்யக் கோரியும் போராடி வருகின்றனர்.*

*"இந்த ஆண்டிலாவது அந்தப் பள்ளி நடைமுறைச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் கடந்த மார்ச் 4-ந் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள வரவு—செலவுத் திட்டத்தில் அது பற்றிய குறிப்பு எதும் இல்லாதது கண்டனத்திற்குரியது; அதனாலேயே, சர்க்காரின் போக்கைக் கண்டிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது," என்று நிர்வாகக் குழுவின் தீர்மானம் கூறுகிறது.*

*"சர்க்கார், ஆசிரியர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதுமன்றி, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியிருக்கின்றனர்," என்று, சங்கச் செயலாளர் விடுத்த அறிக்கை ஒன்று கூறுகிறது.*

# இனபேதமற்ற தொழிற் சங்கம்

*ஜோஹனஸ்பர்க், மார்ச் 8—*

தென்னாப்பிரிக்காவில் இனபேதமற்ற ஒரு தொழிற் சங்கம் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளது என்றும், அதில் இப்போது 42000 பேர் உள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

இந்த நிறுவனம் அரசியலில் ஈடுபடவும் எண்ணியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# வர்க்க ஒற்றுமை எங்கே?

*பிரிட்டனில், வெள்ளைக்காரத் தொழிலாளர்களிடையே மீண்டும் நிறவெறி தலை காட்ட ஆரம்பித்துள்ளதாம்.*

*வெள்ளை இன பஸ் தொழிலாளர்கள், பிக்கா பட்டேல் என்ற ஒரு இந்திய கண்டக்டருடன் ஒத்துழைக்க மறுக்கின்றனர்; இந்த இந்தியத் தொழிலாளியை வெள்ளைத் தொழிலாளிகள் பகிஷ்கரித்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.*

# 'வேலைநிறுத்த முடிவு பரீட்சைகளை பாதிக்காது'

## 'ஏற்பாடானபடி நடந்தே தீரும்'

*மத்தியப் பிரதேச செகண்டரி கல்விக்குழு அறிக்கை*

**நாகபுரி, மார்ச் 8—**

**"'மெட்ரிகுலேஷன்' பரீட்சை ஏற்கனவே நிர்ணயித்தபடி மார்ச் 14-ந் தேதி நடைபெறும்; எக்காரணத்தாலும் ஒத்திவைக்கப்பட மாட்டாது."**

**"செகண்டரி பள்ளி ஆசிரியர்கள் சங்கம், மிக நெருக்கடியான நேரத்தில் செகண்டரி கல்விக் குழுவுடன், பரீட்சையின்போது ஒத்துழைப்பதில்லை என்று செய்துள்ள முடிவு, பரீட்சைக்காக ஏற்கனவே செய்யப்பட்டுள்ள முடிவுகளை எவ்வகையிலும் பாதிக்காது,"**

***—என்று, செகண்டரி கல்விக்குழுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.***

***மாநிலத்தில் உள்ள 107 இடங்களிலிருந்து சுமார் 22 ஆயிரம் மாணவர்கள் அன்று பரீட்சை***

*(தொடர்ச்சி 1-ம் கலம் பார்க்க)*

## வேலைநிறுத்தமுடிவு...

*(5-ம் கலத்தின் தொடர்ச்சி)*

*எழுதுவார்கள் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.*

*மாநில கல்வி இலாகா டைரக்டரான அனுமந்த ராவ், "ஆசிரியர்களின் இந்தமுடிவு துரதிருஷ்டவசமானதாகும்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.*

*"அண்மையில்தான், செகண்டரி கல்வி போர்டு, 15 பேர்கள் அடங்கிய ஒரு தனிக் குழுவை நியமித்து, பள்ளி நடைமுறைச் சட்டத்தை அமுல் நடத்துவதையொட்டிய பொருளாதாரப் பிரச்சினை குறித்தும், இதர பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்துகொண்டிருக்கிறது; இந்தத் தனிக் குழுவின் முடிவுகளை எதிர்நோக்கி இன்னும் சிலகாலம் ஆசிரியர்கள் பொறுத்திருந்திருக்கலாம்," என்னும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.*

---

# தி. மு. கழகக் கிளைகள் தேர்தல் பற்றிய அறிக்கை

*தி. மு. கழகச் சட்ட திட்டங்கள் 97-வது பிரிவின்படி கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள சிற்றூர், பேரூர்க் கிளை [சிறிய-பெரிய பஞ்சாயத்து (Minor-Major Panchayat) ஆட்சிப்பகுதி] —நகராக் கிளை [நகர மன்ற (Municipality) ஆட்சிப் பகுதி] உறுப்பினர்கள் தங்கள் தங்கள் செயற்குழுக்களையும் மாவட்டப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க 27—3—55 ஞாயிற்றுக் கிழமையைத் தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.*

*அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும், அல்லது புதிதாகக் கிளை துவக்கியிருந்தாலும் அப்படிப்பட்ட கிளைக் கழகங்களும் 27—3—55 ஞாயிறன்று கூடி செயற்குழுவை உறுதி செய்துகொண்டு, மாவட்டப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவோ உறுதிப்படுத்திக்கொள்ளவோ வேண்டும்.*

*கழக உறுப்பினர்களாய் இருந்துவருபவர்கள் தங்கள் உறுப்பினர் நிலையை இப்பொழுது புதுப்பித்துக் கொள்ள வேண்டியதில்லை. 28—2—55-ஆம் நாளுக்கு முன் உறுப்பினராகி இருப்பவர்கள் மட்டுமே இந்தத் தேர்தலில் வாக்காளர்களாக இருக்க உரிமையுடையவராவர். உறுப்பினர் சேர்ப்பது இரண்டு திங்களுக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது. 1—3—55-ஆம் நாளுக்கு மேல் புதிதாக உறுப்பினராகச் சேர்பவர்கள் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ளக் கூடாது. 1—3—55-க்குப் பிறகு அமைக்கப்பெறும் கிளைகள் இப்பொழுது பதிவு செய்துகொள்ளப்படமாட்டா. புதிய பொதுக் குழு அமைந்ததற்குப் பிறகுதான் அவை கவனிக்கப் பெறும்.*

*கிளைக் கழகங்களெல்லாம் 27—3—55-ல் தேர்தல் நடத்தித் தேர்தலின் முடிவுகளை, தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பிவைக்கப் பெறும்* **"கிளைக்கழகப் பதிவுச் சீட்டி"**ல் *தெளிவாகக் குறித்து 31—3—55-ம் நாளுக்குள் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.*

*தேர்ந்தெடுக்கப்படும் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோரின் முகவரிகளைத் தெளிவாக அந்தச் சீட்டில் எழுதி அனுப்பவேண்டும்.*

*தேர்தலின் முடிவு குறிக்கப்பட்ட கிளைக்கழகப் பதிவுச் சீட்டு, தலைமை நிலையம் வந்து சேர்ந்தால்தான், ஒவ்வொரு கிளைக் கழகமும் தலைமைக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*27—3—55-ல் தேர்தல் நடத்தும் கிளைக்கழகம் மட்டுமே மாவட்டக்கழகத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும். முன்பே தேர்தல் நடத்தியாகிவிட்டது என்று இருத்தல் கூடாது.*

*27—3—55-ல் கிளைக் கழகத் தேர்தல் நடத்தவேண்டிய மாவட்டங்கள்:*

**சென்னை**
**செங்கற்பட்டு**
**தென் ஆற்காடு**
**வட ஆற்காடு**
**சேலம்**
**கோவை**
**தஞ்சை**
**திருச்சி**
**மதுரை**
**இராமநாதபுரம்**
**திருநெல்வேலி**
**நாஞ்சில்**
**கேரள, ஆந்திர,**
**கர்நாடகப் பகுதிகள்**

### தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்:

1. ஒவ்வொரு சிற்றூரிலும் (சிறிய பஞ்சாயத்து ஊர்—Minor Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட சிற்றூர்க் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு பேரூரிலும் (பெரிய பஞ்சாயத்து ஊர்—Major Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட பேரூர்க் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு நகரிலும் (நகராட்சிப் பகுதி—Municipality) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட நகரக் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
4. சென்னையில் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் (Division) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட வட்டக் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
5. சிற்றூர் — பேரூர் — நகரம் — சென்னை வட்டம் ஆகிய கிளைகளின் தேர்தல்கள் நடைபெறும்போது, அந்தந்தக் கிளைகளின் செயலாளர்கள் குறிப்பிடும் ஓரிடத்தில் வந்து எல்லா உறுப்பினர்களும் கூடவேண்டும். [நகரங்களிலுள்ள வட்டாரங்கள் (Municipal Wards) இப்பொழுது தேர்தல் நடத்த வேண்டியதில்லை. நகரக் கிளை தேர்தல்தான் இப்பொழுது நடைபெற வேண்டும். நகரிலுள்ள எல்லா உறுப்பினர்களும் நகரக் கிளைத் தேர்தலில் ஒருபடியாகக் கலந்துகொள்ள வேண்டும். நகரக் கிளை அமைந்த பிற்பாடு வசதியானபோது 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரமும் (Municipal Ward) நகரக் கிளைச் செயலாளருக்கு அறிவித்துவிட்டு, நகரக் கிளைச் செயற்குழுவின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டின்கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக் கொண்டு இயங்கலாம்.]
6. ஒவ்வொரு கிளையும் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகியோரை அலுவலாளராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
7. செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழு 11 பேருக்குக் குறையாமலும், 21 பேருக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
8. சிற்றூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், பேரூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், சென்னை வட்டக் கிளை இரண்டு பிரதிநிதிகளையும், நகரக் கிளை அந்தந்த நகர மக்கள் தொகையில் ஒவ்வொரு இருபதினாயிரம் மக்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி விதமும் அந்தந்த மாவட்டக் கழகத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.
9. தேர்தல் கிளைக் கழகத்தின் முன்னைய செயலாளராலேயே நடத்தப்பட வேண்டும். முன்னைய செயலாளரே தேர்தலுக்கு நிற்பதாக இருந்தால், கூடியிருக்கும் பொது உறுப்பினர் கூட்டம், தம்மில் ஒருவரைத் தேர்தல் நடத்துபவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்டக் கழகம் அனுப்பி வைக்கும் தேர்தல் ஆணையாளரின் தலைமையில்தான் வட்டக்கிளைத் தேர்தல் நடைபெற வேண்டும். பிற மாவட்டங்களில் அவசியப்பட்டால் குறிப்பிட்ட கிளைகளின் தேர்தல்களை நடத்திவைக்க, மாவட்டச் செயலாளர், தேர்தல் ஆணையாளர்களை அனுப்பி வைக்கலாம்.
10. தேர்தல் நடைபெறும்போது வாக்குரிமை பற்றிய தகராறுகள் கிளம்புமேயானால், கூடும் கழக உறுப்பினர்கள், அவற்றைக் கூட்டத் தலைவரின் தீர்ப்புக்கு விட முயல வேண்டும். அவசியமானால் கூடியுள்ள பெரும்பான்மையோரின் வாக்குகளால் முடிவெடுக்க முயலலாம்.
11. தேர்தல் நாளுக்கு ஒரு வாரத்திற்கு முன்பே, கிளைச் செயலாளர், கழக உறுப்பினர்கள் அனைவரும் அறியும் வகையில் தேர்தல் நடைபெறும் செய்தியையும், தேர்தல் நடைபெறும் இடத்தையும் விளம்பரப்படுத்தி உறுப்பினர் கூட்டம் கூட்ட வேண்டும்.
12. தேர்தல் பற்றிய தகராறு இருந்தால் மாவட்டக் கழகத்தின்மூலம், தலைமைக் கழகத்துக்கு விண்ணப்பம் செய்து நீதி கோரலாம். தலைமைக் கழகம் பிற்பாடு ஆய்ந்தறிந்து தீர்ப்புக் கூறும். தேர்தல் நாளன்று தகராறு கிளப்பக்கூடாது.

**சி. என். அண்ணாதுரை,**
**பொதுச்செயலாளர்**

**'அறிவகம்', சென்னை.**
**5—3—55**

# 'ஹோலி' பண்டிகையன்று ரௌடித்தனம்!

## கொள்ளையடித்தனர் - தாக்குதல் நடத்தினர்

## வடவரின் மகிழ்ச்சித் திருநாள் இலட்சணம்

பண்டிதரும், பிரசாத்தும் பங்குபெற்றனர்

பாட்ஞ, மார்ச் 9—
ஜாஞபர்க் அருகிலுள்ள இல் மாரி எனும் ரயில் நிலையத்திற்கு வந்தடைந்த ஒரு ரயிலை 200 பேர் தாக்கி, பிரயாணிகள்மீது தாக்குதல் நடத்தி, அவர்கள் மீது மண் சாயத் தண்ணீர் அடிக்க முற்பட்டனர்.

போலீசார் அவர்களைச் சாந்தப்படுத்த முற்பட்டனர்; ஆனல், கூட்டத்திலிருந்தவர்கள் பலாத்காரத்திலிறங்க முயன்றனர். இதனல் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்செய்திருக்கின்றனர். போலீசார் சுடும்பொழுது குறி தவறச் செய்வதற்காக அக்கூட்டத்தினர், துப்பாக்கிகளைப் பிடுங்க முயன்றனராம்.

போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் இருவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது'

★

கல்கத்தா, மார்ச் 8—
'ஹோலி' பண்டிகை தினத்தன்று, 'ரௌடி'த்தனத்தில் ஈடுபட்ட சுமார் 500 பேர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

தெருவில் போவோர் வருவோர் மீது சாயத் தண்ணீரை அடித்தும், இன்னும் பல அசம்பாவித காரியங்களில் ஈடுபட்டும், போலீசாரின் தடைகளை மீறியும் அட்டகாசம் புரிந்ததினலேயே அவர்கள் கைது செய்யப்பட்டார்களாம்.

மகிழ்ச்சிகரமான பண்டிகை என்று கருதப்படும் அந்த நாளில், சிலர், ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டு கலகம் விளைவித்த சம்பவங்களும் நிகழ்ந்தனவாம்.

முன்னெச்சரிக்கையாக பஸ், டிராம் இவை அன்று காலையில் நகரில் ஓட அனுமதிக்கப்படவில்லையாம்.

★

புதுடில்லி, மார்ச் 9—
வடநாட்டவருக்கு மிக மகிழ்ச்சிகரமானது என்று கருதப்படுகிற 'ஹோலி' பண்டிகை விழாவில் பண்டித நேருவும், ஜனதிபதி இராசேந்திர பிரசாதும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

'ராஷ்டிரபதி பவனு'க்கு பண்டிதர் காலையிலேயே தமது அருமை மகளாருடனும், பேரக் குழந்தைகளுடனும் வந்து சேர்ந்தாராம்.

டாக்டர் பிரசாத் அவரைத் தழுவி அணைத்துக்கொண்ட பின், இருவரும், ஒருவர் மீது ஒருவர் சாய மாவை வீசியும், முகத்தில் பூசியும் விளையாடி மகிழ்ச்சியடைந்திருக்கின்றனர்.

பின்னர் அந்த இரு பெரிய மனிதர்களும், அங்கு குழுமியிருந்த குழந்தைகளுடன் விளையாடியிருக்கின்றனர்.

குழந்தைகளும் சாயத் தண்ணீரை நேரு மீது வீசி விளையாடியிருக்கின்றன.

மீண்டும் ஒரு முறை குழந்தைகள் சாயநீர் அடிக்க வந்தபோது, பண்டித நேரு, 'மீண்டும் தாக்குதலா?' என்று விளையாட்டாகக் கோபம்கொண்டு, குழந்தைகள் மீது சாயநீர் கொண்டு எதிர்த் தாக்குதல் நடத்தியிருக்கிறர்.

டில்லி நகர் முழுதும் போவோர் வருவோர் எல்லாம் ஒரு ரசாயன மயமாகக் காணப்பட்டனராம்.

★

போபால், மார்ச் 9—
இங்கு 'ஹோலி' பண்டிகைக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒரு கூட்டம் ஒரு கடையைத் தாக்கி நொறுக்கியதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

ஒரு வகுப்பார் இன்னொரு வகுப்பார் நடத்திய 'ஹோலி' ஊர்வலத்தின் மீது கல்லெறிந்து சிலரைக் காயப்படுத்தினர்களாம்.

அவர்களைக் கைது செய்யுமாறு போலீசாரிடம் முறையிட்டனர் போலீசார் விசாரித்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர். ஆனல் தொடர்ந்து அந்தக் கூட்டத்தினர் கலாட்டா செய்ய ஆரம்பித்து போலீசாரின் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மீறி கடையைத் தாக்கி கொள்ளையிட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

## பீராரில் காங்கிரஸ் கோஷ்டிச் சண்டை

**தலைவர் தேர்தலில் தகராறு: கட்சிக்கூட்டம் ஒத்திவைப்பு**

அகோலா, மார்ச் 8—
பீரார் பிரதேச காங்கிரஸ் கட்சிக்கு ஒரு தலைவர் தேர்ந்தெடுப்பதில் நிலவும் மந்தநிலை நீடிப்பதாயும், அதற்காக நேற்று கூடவிருந்த கமிட்டிக் கூட்டம் மார்ச் 27-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுவிட்டதாயும் தெரியவருகிறது.

கமிட்டியின் கடந்த கூட்டம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எஸ். என். அகர்வால் முன்னிலையில் நடைபெற்றபோது மத்தியபிரதேச நிதி மந்திரியான பிர்ஜ்லால் பியானி என்பவரைத் தலைவராக முன்மொழிவது என்று தீர்மானமாகியிருந்தது; ஆனல், அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளாத அமரோதியைச் சேர்ந்த வாமன்ராவ் ஜோஷி என்பவர், பியானியை எதிர்த்து தாம் போட்டியிடப் போவதாக அறிவித்தார்.

பியானி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலன்றி, தலைவர் பொறுப்பேற்கமாட்டார் என்பதினல், சமரசம் ஏதேனும் காண முடியுமா என்பதற்காக கட்சிக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதாம்.

## சேலம் சவ்வரிசி

**சென்னையின் சிபாரிசு**

சென்னை, மார்ச் 9—
சேலம் சவ்வரிசித் தொழிலுக்கு பாதுகாப்பளிக்க சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்குச் செய்துள்ள சிபாரிசுகளை மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் கூறியிருக்கிறர்.

கல்கத்தா நகரசபை கைப்பற்றியுள்ள சவ்வரிசி மூட்டைகளை விடுவிக்கும்படியும், சேலம் சவ்வரிசி மீது மேற்கு வங்க சர்க்கார் விதித்திருக்கும் தடையை நீக்கும்படி மேற்கு வங்க, மத்திய சர்க்கார்களைக் கேட்டுக்கொண்டு எழுதியிருப்பதாயும், மரவள்ளிக் கிழங்கு மாவிலிருந்தும் சவ்வரிசி தயாரிக்கலாம் என விளக்கியிருப்பதாயும், அது பற்றிய விதிகள் திருத்தப்பட்டிருப்பதாயும், சேலம் மாவட்டத்தில் சவ்வரிசி தொழில் நிலைமை குறித்து நிபுணர் குழு தயாரித்த அறிக்கையை வெளியிடும்படி மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருப்பதாயும் மந்திரி பக்தவத்சலம் கூறியிருக்கிறர்.

சவ்வரிசிக்கு சரியானதொரு 'தரம்' நிர்ணயிக்க ஏற்பாடு செய்யும்படியும், தரத்தை உறுதிப்படுத்த ஒரு பரிசோதனைசாலை ஏற்படுத்தும்படியும் மத்திய சர்க்காருக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறதாகவும் மந்திரியார் குறிப்பிட்டிருக்கிறர்.

## தேர்தல் ஒழுங்கீன புகாரைப் போக்க!

'திருவுளச் சீட்டு' போடுவதாம்!

காஞ்சீபுரம், மார்ச் 7—
தமிழ் நாடு காங்கிரஸ் குழுவிற்கு காஞ்சீபுரத்திலிருந்து உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சி. கே. சண்முகம் என்பவரின் தேர்தலை ஆட்சேபித்து டி. டி. பொன்னம்பலம் என்பவர் ஆட்சேபனை மனு ஒன்றை தேர்தல் விசாரணைக் குழுவினரிடம் ஏற்கனவே தந்துள்ளார்.

இந்த மனுவின் மீது விசாரணை செய்து, 'புதுமை'யான ஒரு முறை மூலம் பிரச்சினை பைசல் செய்யப்பட்டிருக்கிறது.

அதாவது, இருவரது பெயர்களையும் எழுதி 'திருவுளச் சீட்டு'ப் போட்டு, அதில் யாருடைய பெயர் சீட்டு முதலில் எடுக்கப்படுகிறதோ அவரே தேர்ந்தெடுக்கப்பட்டதாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, அதன்படி செய்தபோது, அப்போதும் சண்முகத்தின் 'திருவுளச் சீட்டு'தான் முதலில் எடுக்கப்பட்டதாகவும், எனவே, அவரே தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டதாகவும், இப்பைசலை, மனுதாரரான டி. டி. பொன்னம்பலமும் ஏற்றுக் கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

அதை அவர் ஏற்றுக்கொண்டதோடு தாம் செய்துகொண்ட ஆட்சேபனை மனுவையும் திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளாராம்!

மேற்படி விஷயம் பைசல் செய்யப்பட்ட முறை சரியானதல்ல என்றும், தேர்தல் விசாரணையில் 'திருவுளச் சீட்டு' போட்டுப் பார்ப்பதென்பது 'அர்த்தமற்ற' செய்கையாகும் என்றும், விசாரணை விதிகளில் அதற்கு இடமேயில்லை என்றும் இங்கு கருதப்படுகிறதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது.

## குறுக்கெழுத்துப் போட்டிகளை ஆதரிக்காதீர்

காங்கிரஸ்காரர்களுக்கு வேண்டுகோள்

அகமதாபாத், மார்ச் 8—
குறுக்கெழுத்துப் போட்டிகளை ஊக்குவிக்கிற எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடாதிருக்குமாறு எல்லா காங்கிரஸ்காரர்களையும் கேட்டுக்கொண்டு குஜராத் பிரதேச காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தக்கர்பாய் தேசாய் என்ற குஜராத் பிரதேச காங்கிரஸ் கட்சிச் செயலாளர், எல்லா மாவட்ட, வட்ட காங்கிரஸ் கட்சிக் கிளைகளுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், 'குறுக்கெழுத்துப் போட்டியை ஆதரிக்கக் கூடாது,' என்று குறிப்பிட்டிருப்பதுடன், 'சர்க்கார் இதுபற்றி ஏதேனும் செய்தால் நல்லது,' என்றும் குறிப்பிட்டிருக்கிறர்.

ஆங்காங்கே பொதுக் கூட்டங்கள் கூட்டி, காங்கிரசின் இந்தத் தீர்மானத்தையும், குறுக்கெழுத்துப் போட்டியின் தீய விளைவுகளையும் மக்களுக்கு விளக்கிக் கூறுமாறும், அந்த சுற்றறிக்கையில் காணப்படுகிறதாம்.

## அமைச்சரின் எச்சரிக்கை!

இன்னும் 10 ஆண்டுகளில் ஆக்க வேலைக்கு அணுசக்தி பயன்பட ஆரம்பிக்கலாம் என்றும், இப்போதுள்ள இயந்திரங்கள் அப்போது உபயோகமற்றவையாக ஆகிவிடக்கூடுமென்றும் மத்திய மந்திரி கே. சி. ரெட்டி எச்சரித்திருக்கிறர்.

தொழில்களில் நவீன இயந்திரங்களை அமைத்து சிக்கனச் சீரமைப்பு நடத்துவது பற்றியே மத்திய மந்திரி அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறர்.


# சிறப்புச் சொற்பொழிவு

(தி. மு. கழக தலைமை நிலைய அனுமதி பெற்றது)

தோழர்கள் ★

**என். வி. நடராசன்**
—'சிதம்பர இரகசியம்'

**ஏ.வி.பி. ஆசைத்தம்பி**
—'கடவுள் எங்கே?'

**டி. கே. சீனிவாசன்**
—'இலட்சியப் பாதையில் நாம்'

**13-3-55 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில்**

நன்கொடை: அணு 8; அணு 4

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்


## கழகக் கூட்டம்

★

திருவானைக்கா
தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா
பாரதித் தெருவில்
12—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. வடிவேலு
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
அன்பில் தர்மலிங்கம்
எம். எஸ். மணி

## சென்னையில் அணுசக்தி மாநாடு

அணுசக்தியை சாமாதான காரியங்களுக்குப் பயன் படுத்துவது பற்றி அமெரிக்க செய்திநிறுவனம், தென்னிந்தியாவின் பிரபல விஞ்ஞானிகளைக்கொண்டு சென்னை கோகலே மண்டபத்தில் மார்ச் 11, 12-ந் தேதிகளில் தினம் மாலை 6 மணி முதல் 8½ மணிவரை மாநாடு ஒன்று நடத்துகிறது.

மாநாட்டிற்கு அமெரிக்க செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த பொது ஜன அதிகாரி பால். சி ஹெர்பர்ட் தலைமை தாங்குவார் என்றும், மாநாட்டில், அணுசக்தியின் சமாதானக் காரிய உபயோகங்கள் குறித்த படக்காட்சிகளும் இன்ன பிறவும் இடம் பெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## சொற் பயிற்சிக் கூட்டங்கள்

11—3—55 மாலை 6½ மணிக்கு, வண்ணையம்பதி தியாகராயர் பகுத்தறிவு மன்றத்தில், தோழர் செ. பிரியாதுரை தலைமையில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

12—3—55 இரவு 10 மணிக்கு, மதுரை, கரீம்சா பள்ளி தெருவில் உள்ள வாசல் படிப்பக அலுவலகத்தில், மதுரை நகர் அறிவு வளர்ச்சி படிப்பகத்தின் சொற்பயிற்சி மன்ற ஆரம்ப விழா, தோழர் எஸ். எம். பாருப் தலைமையில் நடைபெறும். 'மறுமலர்ச்சி' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

12—3—55 இரவு 7 மணிக்கு, சென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்றத்தில், தோழர் அன்பாணந்தன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர், பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றுவர்.

## கூட்டு ஒப்பந்தம்!

இந்திய அரசாங்கமும், அமெரிக்காவை சேர்ந்த 'ஸ்டாண்டர்டு வாக்குவம் ஆயில் கம்பெனி'யும், மேற்கு வங்காளத்தில் எண்ணெய் உற்பத்தி செய்வதற்கு ஓர் கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன.

ஹூக்ளி நதியின் இரு கரையிலும் எண்ணெய் கிடைக்கக்கூடிய இடங்களைக் கண்டுபிடிக்க இக்கம்பெனி ஆராய்ச்சி நடத்தி வருகிறது.

## என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

மார்ச் 11: புதூர் ஆதமங்கலம்
13: காலை—சென்னை (சிறப்புக் கூட்டம்)
மாலை— கோட்டைக் குப்பம்
14: கொங்கராப்பட்டு
19: ராசப்பய்யன் சாவடி (சீடாமங்கலம்)
20: திருச்சி
21: குறும்பேரி
22: ஜோலார்பேட்டை
23: சீர்காழி
24: சந்தைப் புதுப் பாளையம்

## ஈரோடு எஸ். அப்பாவு

சுற்றுப்பயணம்

மார்ச் 13: கருமலை
14: வால்பாறை

## சத்தியவாணிமுத்து

சுற்றுப்பயணம்

மார்ச் 12: செல்லம்பட்டி
13: சேலம்
14: சிங்கபுரம்

## வட ஆற்காடு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்

13—3—55 மாலை 2 மணிக்கு, வேலூர் டவுன் மண்டபத்தில் வட ஆற்காடு மாவட்ட செயற் குழுக் கூட்டம் நடைபெறும். இதுவே இப்போதுள்ள குழுவின் கடைசி கூட்டமாகையால் எல்லா மாவட்ட பிரதிநிதிகளும் தவருமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறர்கள். ஆய்வுக்கு வருபவை: மாநில மாநாட்டிற்கு நிதி தருவது: கிளைக் கழகத் தேர்தல் (பொதுக் குழு தீர்மானம்); 20—3—55 அன்று கண்டனக் கூட்டம் நடத்துவது; மாவட்ட மாநாட்டின் வரவு-செலவு கணக்கு பரிசீலனை; செயலாளரால் கொண்டுவரப்படும் பிரச்சினைகள்.

## தஞ்சை மாவட்ட சர்க்கார் கெஜட் பதிவில்லாத ஊழியர்கள் மாநாடு

"மேற்படி மாநாடு 13—3—55 ஞாயிறன்று காலை 9-30 மணியளவில், தஞ்சை மாவட்ட அருளானந்தசாமி நாடார் தோட்டத்தில், தஞ்சை மாவட்ட அதிகாரி சீ. ஏ. ராமகிருஷ்ணன் அவர்களால் துவக்கி வைக்கப்படும். திரு. ஆர். பாலகிருஷ்ண நாயுடு தலைமை தாங்குவார்," என்று, வரவேற்புக் குழுத் தலைவர் ஆர். பண்டரிநாதன் அறிவிக்கிறர்.


திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி என் அண்ணாதுரை, எம்.ஏ.